1990 ஆகஸ்ட் 23]

(இ) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

11–30 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற மாநகராட்சித் தேர்தல்கள் வருகின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று எனது கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற ஆசைப்படுகின்றேன். மாவட்டங்கள், புதிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் மாவட்டத்தின் தலைநகரங்கள் ஏராளமாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றினுடைய வளர்ச்சியும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நகரைச் சுற்றி இருக்கும்படியான கழனி நிலங்கள், காடுகள் வீடு கட்டும் மனைகளாகப் பிரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. நிலங்களின் விலைகளும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு நகரங்கள் பெருகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையில் அறிவித்ததைப் போன்று, வீடு கட்டும்படியான டவுன் பிளானிங் சட்டத் திருத்தத்தை விரைவுபடுத்தி அமல்படுத்தவேண்டும். ஏனெனில், ரோடுகள், ஓடைகள், மின்சார விளக்குகள் இல்லாமலே நிலங்களை விற்கக்கூடிய, லே-அவுட் போட்டு விற்கும்படியான நபர்கள் விற்று விடுகிறார்கள். குடியிருப்பதற்குத் தேவைப்படுகின்ற மக்கள் நிலங்களை வாங்கி வீடு கட்ட முடியாத நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது.

எனவே, இத்தகைய நிலங்களை வாங்கி மனையடிகளாகப் பிரித்து விற்கக்கூடிய நபர்களிடத்தில் மாநில அரசு அறிவித்ததைப் போன்று சாலை வசதி, மின்சார வசதி, ஓடை வசதி போன்ற வசதிகளைச் செய்து மனையடிகளாகப் பிரித்து

---

*20-8-1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

விற்கும்படியான நிர்பந்தத்தை அரசு கொண்டு வந்து அமல்படுத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே, இந்த நகராட்சிகள் சுய நிதியில் இயங்குவதற்கு முடியாத நிலை நீடித்துக் கொண்டே இருக்கிறது. நகராட்சிகளுக்கு மாநில அரசு கொடுக்க வேண்டிய மானியங்கள் காலத்தில் கிடைக்காத நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நகராட்சிகள் சுய நிதி நிலையில் ஆட்சி நடத்துவதற்கு, நகராட்சி நிர்வாகத்தைக் கொண்டு செல்வதற்கு, அபிவிருத்திகளைச் செய்வதற்கு இந்த நகராட்சிகள், கடைகள், திருமண மண்டபங்கள், டவுன் ஹால்கள் போன்ற வசதிகளைச் செய்து வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கு ஆக்கப்பூர்வமான சில நடவடிக்கைகளை மாநில அரசு இந்த நகராட்சிகளுக்கு நிதியுதவி செய்து, கடனுதவி செய்து சுய நிதியை நிறைவேற்றவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். எவ்வாறு மாநில அரசு மத்திய அரசிடம் நிதியுதவியை எதிர்பார்த்து நிற்கின்றதோ அது போல் மாநிலத்தின் நிர்வாகத்தை, மாநில அரசை எதிர்பார்த்து இந்த நகராட்சிகளின் நிதிநிலை இருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்குப் பலவேறு சலுகைகளையும், கோரிக்கைகளையும் அறிவித்து இருக்கின்றார்கள். நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அவைகள் காலத்தில் அந்த மக்களுக்குக் கிடைப்பதற்கு உதவியாக சட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, துப்புரவுப் பணியில் மிகவும் பின் தங்கிய நிலை நீடிக்கின்றது, போதிய அளவுக்கு ஜனப் பெருக்கமும், குடியிருப்புகளும் அதிகரித்ததற்குப் பிறகும் அந்த மக்களுக்குச் செய்யவேண்டிய சுகாதார வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. குப்பைகள் எடுப்பதற்கு, மலங்களை அப்புறப்படுத்துவதற்கு, சாலைகளைப் பெருக்குவதற்கு, அபிவிருத்தி விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளுக்கு துப்புரவுப் பணியாளர்களை நியமிப்பதிலும் இன்றைக்குக் குறைபாடு இருக்கின்றது. போதிய ஊழியர்கள் இல்லாத நிலை நீடிக்கின்றது. எல்லா நகராட்சிகளும் தமிழக அரசிற்குத் தீர்மானங்களை நிறைவேற்றி, துப்புரவு ஊழியர்களை அதிகப்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கின்றார்கள். அதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்தி, ஜனத் தொகை பெருகிய அளவிற்கு மாநகராட்சிகளாக ஆன பிற்பாடு, ஊராட்சிகள் பேரூராட்சிகளாக ஆன பிற்பாடு, பேரூராட்சிகள், நகராட்சிகளாக ஆன பிற்பாடு, இந்தத் துப்புரவுப் பணியாளர்களை அதிகப்படுத்தாத நிலை நீடிப்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஏராளமான நாட்கூலித் தொழிலாளர்களாக, கேங்க் கூலிகள், துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்

1990 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். ஏ. தங்கராஜன்]

கிறார்கள். அரசு விதிப்படி 480 நாள் பணி புரிந்த ஊழியர் அனைவரையும் நிரந்தரப் படுத்துவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவாகள் முன முயற்சி காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் திண்டுக்கல் நகரததில் குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றிய 65 ஊழியர்களைத் திடீரென்று வேலையிலிருந்து வெளியேற்றிவிட்டு, புதிதாக நபர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தையும் மீறி, சட்ட நீதியையும், சமூக நீதியையும் மீறி பழைய ஊழியர்களை வேலை நீக்கம் செய்து புதிய ஊழியர்களை வேலைக்கு எடுத்து இருப்பது என்பது அநீதியானது. இதை எதிர்த்து ஊழியர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றமும் தடை விதித்த பிறகும் அந்த தடையை மீறி இந்த புதிய ஊழியர்களை வேலையில் சேர்த்து இருப்பது, ஒரு அரசு நிறுவனமே தான் போட்ட சட்ட நீதியை மீறுவது என்பது வேதனையானது என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவாகளின் நேரடியான கவனத்திற்குக் கொண்டுவந்து வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்கள் அனைவருக்கும் மீண்டும் வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11—35 மணி.

எங்கள் திண்டுக்கல் நகரத்தினுடைய குடிநீர் திட்டம் நிறைவேறியதற்கு பிறகும் அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேறாத காரணத்தால் நகரத்திலிருந்து வெளியேறும்படியான கழிவு நீர் தினசரி தேங்கி சாக்கடை குளங்களாக நிற்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்தக் குளங்களிலிருந்து வரும் கொசுக்கள் மக்களை மிகவும் துன்புறுத்துகிறது எனபதை இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, திண்டுக்கல் உறுப்பினர் திரு. தங்கராஜன் அவர்கள் சில கருத்துக்களை வழங்கியதைப் பற்றி சந்தோஷப்பட்டாலும் இந்த லே அவுட் போட்டு கொடுக்கின்ற சில நகராட்சிகளில் என்ன செய்கிறார்கள் என்றால் தாங்களே ரோடு போடுவதாகவும், தாங்களே லைட் போடுவதாகவும் 'எல்லா வசதிகளையும் தாங்களே செய்து கொடுக்கிறோம் என்று சொல்லி அந்தப் பணத்தை எங்களிடம் கட்டு என்று சொல்லிவிட்டு பல நகராட்சிகளிலே அந்தப் பணத்தைப் பெற்று வேறு விதமான வேலைகளுக்கு அதை பயன்படுத்துகிறார்கள். இன்னும் பல வருடங்கள் ஆகியும் அந்த லே அவுட்களில் ரோடு போடுவது இல்லை, லைட் போடுவது இல்லை, எந்தவிதமான சௌகரியமும் செய்யாமல் பல நகராட்சிகள் இருக்கின்றன.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 ஆகஸ்ட் 23

அதேமாதிரி பப்ளிக் பர்பஸ் என்று விடக்கூடிய இடத்திலே நகராட்சிகள் எங்களிடமே அதை ஒதுக்க வேண்டும் என்ற ஒரு வார்த்தையைப் போட்டு ஒதுக்கிய உடனே அப்படி பப்ளிக் பர்ப்பஸ்க்கு என்று விட்ட இடத்திலே பல சமூக விரோதிகளைக் கொண்டு வந்து உட்புகுத்துகின்ற காட்சி கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. நான் முக்கியமாகச் சொல்கிறேன் சமூக விரோதிகள். அதேமாதிரி பிரைவேட் இடத்திலே இருக்கும்போது அந்த லே அவுட் போடும்போது அவனை அனுமதிக்கவில்லை, ஆனால் முனிசிபாலிட்டிக்கு வந்த உடனே சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு வந்து விடுகிறது. அப்படி வரும் ஆக்கிரமிப்பை எடுப்பதற்கு வகை இல்லாமல் போய் விடுகிறது, நானே சொல்கிறேன், பல கட்சிகள் அதற்கு உதாரணமாக இருக்கின்றன. அவர்கள் ஏழைகள், பாழைகள் என்று போகக்கூடிய உதாரணங்கள் இருக்கின்றன என்பதை நான் காட்டுகிறேன். அதேபோல் அந்த நகராட்சிகளில் முக்கியமான இடங்கள் ஒதுக்கப்பட்ட பலயிடங்களில் ஆக்கிர மிப்பு நடந்து இருக்கின்றன. ஐசலேட்டட் ஷெட் போன்றுள்ள பல பொது இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்புகளை நகராட்சிகள் அகற்றாமல் இருப்ப தால் பலவிதமான சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பலவிதமான பிரச் சினைகள் இருக்கின்றன. இதையெல்லாம் மாண்புமிகு நக ராட்சித் துறை அமைச்சர் அவர்கள் சரி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மா-மன்றத்திலே என்னால் முன்மொழிந்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இங்கே பேசப்பட்டதை ஒட்டி நான் இரண் டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 7-ன் படி இதுவரை நகராட்சிகள் உட்பட்ட வார்டுகள் அனைத்திற்கும் மொத்தமாக நான்கில் ஒரு பங்கு சேர்ந்தது ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு செய்யலாம் என்ற முறை தான் இருந்தது. இந்திய தேசத்திலே முதன் முறையாக இந்த ஒதுக்கீடுகளை அமல் செய்த அரசு நம்முடைய அரசு, அதிலும் குறிப்பாக மாண்புமிகு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அரசு தான். அதற்கு ஏற்கனவே ஊராட்சி மன்றத் திற்கு அறிவித்து விட்டு அதற்குப் பிறகு அண்மையிலே கூட மாநகராட்சிகள் சென்னை, கோவை மதுரை, ஆகிய மூன்று மாநகராட்சிகளுக்கும் மக்கள் தொகை அடிப்படையில் ஆதி திராவிடர்கள் பழங்குடியினர்க்கு விழுக்காடுகள் ஒதுக்கவும் அதேபோல் 30 சதவீதம் மகளிருக்கும் இட ஒதுக்கீடு ஒதுக்கவும் அதற்கு சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டு இன்று

11–40 மணி

தேர்தல் நடைபெறுகிற நிலையில் இருக்கிறது. அதையே ஒட்டி அதன்படி இப்போது நகராட்சிகளுக்கும் வார்டுகள் உரிய எண்ணிக்கையில் உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்தில் எல்லா ஆதி திராவிடர்கள் பழங்குடியினர்கள் நகராட்சி எல்லைக்குட்பட்ட மக்களில் ஆதி திராவிடர்கள் பழங்குடியினர் எத்தனை விழுக்காடு இருக்கிறார்களோ அத்தனை விழுக் காட்டில் வார்டுகளில் அவர்கள் நிற்கிற பகுதியை எண்ண வேண்டும் என்றும் அதேபோல் மகளிருக்கு 30 சதவீதம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் தான் இந்த சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் தங்கராஜ் அவர்கள் சில கருத்துக் களை இங்கே சொன்னார்கள். ஒரு கருத்து, மாநில அரசு, மத்திய அரசின் உதவியை நாடி நிற்பதைப்போல ஆங்காங்கு சுயநிதி இல்லாமல் ஊராட்சிகள் நகராட்சிகள் இன்றைக்கு நிற்கிறது என்ற கருத்தையும் சொல்லி அதோடுகூட போதுமான அளவுக்கு அரசு உதவி அளிக்காத காரணத்தால் பல சங்கடங்கள் வரு கின்றன என்பதையும் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றை குறிப்பிட்டுக் கூற விழைகிறேன். அதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்கும் அதற்குப் பின்னாலே, 13 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்தப் பொறுப்பை அவர் ஏற்று முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு, நிதிநிலை அறிக்கையைப் படித்து முடித்ததற்குப் பிறகு அவ்வப்போது எந்தெந்தத் துறையில் அத்தியாவசியமான செலவினங்கள் என்று கருதி அவரிடத்தில் நிதியுதவி கேட் டோமோ அவர் அந்த அளவுக்கு நிச்சயமாக நிதி உதவி தந்து, இன்னும்கூட குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நேற்றைய தினம் அவர் இந்த மாமன்றத்தில் துணை மானியக் கோரிக்கையை வைத்தபோதுகூட அதில் இரண்டு மூன்று பக்கங் கள், ஊராட்சி, நகராட்சி இவைகளுக்கு, புதிய அத்தியாவசிய மான பணிகளுக்கு ஒதுக்கிய தொகையைத்தான் பின்னேற்பவர் கேட்டார் என்பதை நான் இங்கே நினைவு கூற விழைகிறேன். அவ்வளவு அதிகமான தொகைகளை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியதற்குப் பிறகு துணை மானியக் கோரிக்கைக்கு முன் னால் ஒதுக்கி அதை அளித்து அது ஆங்காங்கு விநியோகிக்கப் பட்டு அந்தப் பணிகள் தொடரப்பட்டிருக்கிறது என்பதையும், அவர் இன்றைய தினம் அளித்திருக்கிற உதவித்தொகையால் என்னென்ன பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டி யலும் சில நாட்களுக்கு முன்னாலே வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியல்கள் பணிகளாக இப்போது மாறி வந்திருக் கிறது என்பதையும் அவர்கள் நேரில் பார்க்கலாம் என்பதை நான் தெரிவித்தேன்.

துப்புரவுப் பணிகளைப் பற்றி ஒரு கருத்தை வெளியிட் டார்கள். மக்களின் எண்ணிக்கைக்கு தக்கவாறு அது இல்லை யென்று சொன்னார்கள். ஒரு துறையை நாம் ஏற்றுக்கொண்

டாலும், அதாவது தூசு படியாத நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும், அதை கூட்டிச் சுத்தம் செய்யவேண்டும் என்று ஒரு பகுதியும் அதைப்போலவே மலம் எடுத்து அதைச் சுத்தம் பண்ணவேண்டும் என்று ஒரு பகுதியும் இரண்டும் சேர்ந்து துப்புரவு பணியாக இருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கிற தேசிய முன்னணி அரசைப் பொறுத்தவரையில், கூடுமானவரையில், மக்கள் எடுக்கிற கழிவிடங்களில் மனிதர்கள் அப்படிப்பட்ட அந்தக் கழிப்பிடங்களில் போய் மலத்தை எடுக்கக் கூடாத அளவுக்கு அதிலே நீரூற்றியாக திட்டங்களை அமைத்து அந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அவர்களை அந்த நிலையில் மாற்றவேண்டும் என்பதற்காகத்தான் அதிலே அதிகமான எண்ணிக்கையை நாம் எடுக்கவில்லை. படிப்படியாக தன்னுடைய எண்ணிக்கையைக் குறைத்து மாற்றுப் பணிகளுக்கு அவர்களை அமர்த்துவதற்காக பல திட்டங்களை வகுத்து அதை மாற்றிக்கொண்டு வருகிறோம். மெல்ல மெல்ல அந்தச் சிக்கலும் தீர்க்கப்படும். ஓரிரு நகரங்களில் மக்கள் தொகை அதிகரித்தாலும் அப்படிப்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் குறைவாலும் சில சங்கடங்கள் இருப்பது எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதை பிரத்தியேகமாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை தேவையென்றால் எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அத்தோடுகூட நம்முடைய மாண்புமிகு ஜனதா தளத்தின் தலைவர் தீட்சிதர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், டவுன் பிளானிங்கில் சில சங்கடங்கள் வருகிறது என்று. இதை நம்முடைய தங்கராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பிடும்போது அவர்கள் அதற்கான உரிய தொகை செலுத்தாமல், அந்தத் தொகையைச் செலுத்தாத காரணத்தாலே அதை நகராட்சி ஏற்றுக் கொள்ளாமல், தேவையான அத்தியாவசியப் பணிகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நினைவூட்டினார்கள். அதற்கு மறுத்து, நம்முடைய தீட்சிதர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சில இடங்களில் வீடு கட்டப்பட்டு, அடிப்படை வசதிகளான விளக்கு போடுதல், சாலைப் பராமரிப்பு, குடிநீர்வசதி போன்றவற்றைச் செய்கிறோம் என்று நகராட்சி மன்றத்தில் இருக்கிற அலுவலர்களும் மற்றவர்களும் பணத்தைப் பெற்றுக்கொண்டு அந்தப் பணியைச் செய்யாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவல், யார் பணம் தர வேண்டுமோ அவர்கள் பணம் தராமல் இருந்தும்கூட அப்படிப்பட்ட இடங்களில்கூட சில பணிகளைப் பெருந்தன்மையோடு நகராட்சி மன்றங்களும், மாநகராட்சி மன்றமும் சேர்ந்துதான் நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். குறிப்பாக ஒன்று சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு சென்னை மாநகராட்சியில் இருக்கிற தனியார் தெரு என்று இரண்டு மூன்று மாதங்கள் வரை ஒதுக்கப்பட்டு கிடந்ததை இன்றைய தினம் நாம் எடுத்து அவைகளுக்குப் பணி

1990 ஆகஸ்ட் 23] [திரு. கோ. சி. மணி]

11-45 மணி

செய்வதற்கு பல கோடிக்கணக்கான ரூபாயை தமிழக அரசும் சென்னை மாநகராட்சியும் சேர்ந்து அந்தப் பணியைத் துவங்கி அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நல்ல செய்தியை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு இல்லாமல் தகவலை நீங்கள் தந்தால், நம்முடைய தீட்சிதர் அவர்கள் இன்ன நகராட்சியில் இன்னார் வீடு ஒதுக்கி கட்டியதற்கு கொடுக்கப்பட்ட தொகையை நகராட்சி பெற்றுக்கொண்டு அவர்கள் என்ன பணி செய்யவேண்டுமென்று சொன்னார்களோ அவர்கள் எதை ஏற்றுக்கொண்டார்களோ அதைச் செய்யவில்லை என்ற புகார் இதுவரை சட்டமன்றத்திலும் சொல்லவில்லை; தனியாகவும் என்னிடத்தில் குறிப்பிடவில்லை. இனிமேல் அப்படி குறிப்பிட்டு அவர் காட்டுவாரேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் கடந்துவிட்ட காரணத்தால், நான் குறிப்பிட்ட ஒரே ஒரு பிரச்சினைக்காகத்தான் இந்த சட்டமுன்வடிவை இங்கே நான் கொண்டு வந்திருக்கிறேன். இட ஒதுக்கீட்டை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இந்திய தேசத்திலேயே, நாம்தான் முதலிடமாக முனைந்து கொண்டு, இந்த வரலாற்றையும், நல்ல ஒரு புதுமையையும் உண்டாக்கியிருக்கிறோம். எனவே, இதைப் பெருந்தன்மையோடு ஏற்று, நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டி விழைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. கோ. சி. மணி] [1990 ஆகஸ்ட் 23

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொத்துவரிக் கணக்குகளுக்கு சில நெறி முறைகளை—'கெய்டு லைன்ஸ்'—வரையறுத்து, கடந்த அரசு 1137 எண்ணுள்ள ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை செல்லத்தக்கதாக ஆக்குவதற்காகத்தான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இல்லையென்று சொன்னால், ஏற்கனவே சொத்து வரிகளை அதிகமாக போடப்பட்டிருக்கக்கூடிய அந்த நிலையில் பலபேர் நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியும். எனவேதான், அதற்கான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். முந்தைய அரசு இதை மட்டும் செய்யவில்லை; நகராட்சிகளுக்கு இருந்த அதிகாரங்களையே பறித்தது. 5 ஆண்டுகள் என்று இருக்க வேண்டிய நகராட்சிகளின் காலத்தை 3 ஆண்டுகளாக குறைத்தது. 'அப்பீல் கமிட்டி' — வரி முறையீட்டுக் குழு இதில் நகராட்சித் தலைவர்களையே நீக்கிவிட்டு, 'ஆர்.டி.ஓ.'-க்களைப் போட்டது. வரியைக் குறைப்பதற்குக் கூட, ஐந்து சதவிகிதத்திற்கு மேல் குறைக்கக் கூடாது என்பது போன்ற பல நிர்பந்தங்களையெல்லாம், திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்தது. இதற்கு அடிப்படையான காரணம், தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே உள்ளாட்சித் தேர்தல்கள் பெருவாரியான நகரமன்றங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எதிர்க்கட்சிகள் அதில் பெருவாரியாக வந்துவிட்டக்

* 20—8—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.